

கொழும்பு மாநகரசபை

(1) பெருங்கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டுத் திட்டம் இலங்கை அரசாங்கத்தால் (GOSL) நிதியளிக்கப்படுகிறது

(i) இலங்கை அரசாங்கம், கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் "பெருங்கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டுத் திட்டத்தை" 37.5 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் நிறைவு செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. கிருலபன நீர்ப்பிடிப்புப் பகுதியில் பகுதியளவு கட்டி முடிக்கப்பட்ட நீரேற்று நிலையங்களையும் புவியீர்ப்பு வடிகால் வலையமைப்பையும் நிறைவு செய்வதும், நகரக் கழிவுநீர் வசதியின் கொள்ளளவை அதிகரிப்பதும் இத்திட்டத்தின் நோக்கங்களாகும்.

(ii) ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள், தமது தகுதிகள் மற்றும் அனுபவத்திற்கு ஏற்ப அட்டவணை 1-இல் பட்டியலிடப்பட்டுள்ள பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

(2) ஐரோப்பிய முதலீட்டு வங்கி (PIB) நிதியுதவியுடன் கூடிய பெருங்கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டுத் திட்டம்.

(i) பெருங்கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டுத் திட்டத்தின் (GCWWMIIP) மூன்றாம் கட்டம், ஐரோப்பிய முதலீட்டு வங்கியின் (EIB) நிதிபுடன் செயல்படுத்தப்படுகிறது. மேலும், மேற்கண்ட திட்டத்திற்கான ஒப்பந்தம் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம், பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் செயல்படுத்தப்பட்டு, கொழும்பு மாநகர சபையால் நடைமுறைப்படுத்தப்படுகிறது. 2027 டிசம்பர் 01-ஆம் திகதிக்கு முன்னர் நிறைவு செய்யும் நோக்கில் மேற்கண்ட பணிகளைச் செயல்படுத்துவதில், தகுந்த தொழில்நுட்ப, நிதி மற்றும் ஒப்பந்த மேற்பார்வையை வழங்குவதற்காக, செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவில் பின்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் செலவு 50 மில்லியன் யூரோக்கள் ஆகும்.

(11)ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள், தமது தகுதிகள் மற்றும் அனுபவத்திற்கு ஏற்ப, அட்டவணை 2-இல் பட்டியலிடப்பட்டுள்ள பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

அட்டவணை 1-

பதவி	பதவிகளின் எண்ணிக்கை	முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இல.2/2026-இன் படியான சம்பள அளவுத்திட்டம்	தகைமைகள்
கணிய அளவையாளர்	01	D 250,000-2x 10,000 270,000	(கீழே 1 அல்லது 2) 1)இளங்கலைப் பட்டம்/ தொடர்புடைய துறையில் பட்டத்திற்கு இணையான தகுதியாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தகுதி அல்லது இணை அங்கத்துவம் (Associate Membership)/ தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை அமைப்பிலிருந்து பெறப்பட்ட அதுபோன்ற ஒரு தொழில்முறைத்

			தகுதி அல்லது தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் 06 வருட அனுபவம்.
			2)அரச நாடளாவிய சேவைகளில் II/III வகுப்பு அல்லது அதற்கு மேற்பட்ட அதிகாரி அல்லது தொடர்புடைய துறையில் அதுபோன்ற தகுதியில் இருத்தல். மற்றும் தொடர்புடைய துறையில் II/III வகுப்பு பதவியில் அல்லது அதுபோன்ற தகுதியில் குறைந்தது 06 வருட அனுபவம்.
உதவி பொறியியலாளர்	சிவில் 05 இயந்திர-01 மின்- 01	E 180,000-2x 7500 195,000	(கீழே 1 அல்லது 2 அல்லது 3) 1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் இளங்கலைப் பட்டம் / பட்டத்திற்கு இணையான தகுதியாக அங்கீகரிக்கப்பட்ட ஒரு தகுதி அல்லது பதவியின் தொடர்கபுடையதாக, மூன்றாம்நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட, தேசிய தொழிற் தகைமை நிலை 7-க்குக் குறையாத திறன் சான்றிதழ் பெற்றிருத்தல் மற்றும், தேவைப்படும். சிறப்புத் துறையில் குறைந்தபட்சம் 03 வருட சேவை அனுபவம் பெற்றிருத்தல். 2). பதவியின் தொடர்கபுடையதாக, மூன்றாம்நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட, தேசிய தொழிற் தகைமை நிலை 6-க்குக் குறையாத திறன் சான்றிதழ் பெற்றிருத்தல் மற்றும், தேவைப்படும். சிறப்புத் துறையில் குறைந்தபட்சம் 06 வருட சேவை

			அனுபவம் பெற்றிருத்தல். 3.) பதவியின் தொடர்கபுடையதாக. மூன்றாம்நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட, தேசிய தொழிற் தகைமை நிலை 5-க்குக் குறையாத திறன் சான்றிதழ் பெற்றிருத்தல் மற்றும், தேவைப்படும். சிறப்புத் துறையில் குறைந்தபட்சம் 09 வருட சேவை அனுபவம் பெற்றிருத்தல்
செயற்றிட்ட செயலாளர்	01	F 150,000-2x 7500 165,000	(கீழே 1 அல்லது 2) 1) க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சிங்களம் /தமிழ் மொழி, ஆங்கிலம் மொழி உள்ளடங்கலாக நான்கு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். மற்றும் க.பொ.த (உத) பரீட்சையில் மூன்று பாடங்களில் (சாதாரண பொது வினாப்பத்திரம் தவிர்ந்த) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் பெறப்பட்ட செயலாளர் தேர்ச்சி பற்றிய சான்றிதழ் அல்லது பட்டய செயலாளர் தேர்ச்சி தகுதிக்கான நெறியை கற்ற வண்ணம் இருத்தல். 2.) தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் 03 வருட அனுபவம் கொண்ட பட்டயச் செயலாளராக இருத்தல் வேண்டும்.
ஒப்பந்த நிபுணர்	01	C 295,000-2x 10,000 315,000	(கீழே 1 அல்லது 2 அல்லது 3) 01.சம்பந்தப்பட்ட துறையில் இளங்கலைப் பட்டம் (Bachelor's Degree) பெற்றிருத்தல். மற்றும் சம்பந்தப்பட்ட துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட இணை அங்கத்துவம் (Associate Membership) அல்லது அதற்கு ஒத்த தொழில்சார் தகைமையினைப்

			பெற்றிருத்தல். அத்துடன் சம்பந்தப்பட்ட துறையில் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தது 08 வருட அனுபவத்தினைப் பெற்றிருத்தல். 02.சம்பந்தப்பட்ட துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட கூட்டாண்மை அங்கத்துவம் (Corporate Membership) அல்லது அதற்கு ஒத்த தொழில்சார் தகைமையினைப் பெற்றிருத்தல். அத்துடன் சம்பந்தப்பட்ட துறையில் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தது 06 வருட அனுபவத்தினைப் பெற்றிருத்தல். 03.அரசாங்க நாடளாவிய சேவைகளில் I.ஆம் வகுப்பு உத்தியோகத்தராக அல்லது சம்பந்தப்பட்ட துறையில் அதற்கு ஒத்த தரநிலையைக் கொண்ட உத்தியோகத்தராக இருத்தல். மற்றும் சம்பந்தப்பட்ட துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட இணை அங்கத்துவம் (Associate Membership) அல்லது அதற்கு ஒத்த தொழில்சார் தகைமையினைப் பெற்றிருத்தல். அத்துடன் I.ஆம் வகுப்புப் பதவியில் அல்லது சம்பந்தப்பட்ட துறையில் அதற்கு ஒத்த தரநிலையிலான பதவியில் குறைந்தது 02 வருட அனுபவத்தினைப் பெற்றிருத்தல்.

அட்டவணை 2-

பதவி	பதவிகளின் எண்ணிக்கை	முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இல.2/2026-இன் படியான சம்பள அளவுத்திட்டம்	தகைமைகள்
தொழிநுட்ப உத்தியோகத்தர்	சிவில் 03 இயந்திர-01 மின்- 01	E 180,000-2x 7500 195,000	(கீழே 1 அல்லது 2 அல்லது 3) 2) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் இளங்கலைப் பட்டம் / பட்டத்திற்கு இணையான தகுதியாக அங்கீகரிக்கப்பட்ட ஒரு தகுதி அல்லது பதவியின் தொடர்கபுடையதாக, மூன்றாம்நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட, தேசிய தொழிற் தகைமை நிலை 7-க்குக் குறையாத திறன் சான்றிதழ் பெற்றிருத்தல் மற்றும், தேவைப்படும். சிறப்புத் துறையில் குறைந்தபட்சம் 03 வருட சேவை அனுபவம் பெற்றிருத்தல். 2). பதவியின் தொடர்கபுடையதாக, மூன்றாம்நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட, தேசிய தொழிற் தகைமை நிலை 6-க்குக் குறையாத திறன் சான்றிதழ் பெற்றிருத்தல் மற்றும், தேவைப்படும். சிறப்புத் துறையில் குறைந்தபட்சம் 06 வருட சேவை அனுபவம் பெற்றிருத்தல். 3.) பதவியின் தொடர்கபுடையதாக, மூன்றாம்நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட, தேசிய தொழிற் தகைமை நிலை 5-க்குக் குறையாத திறன் சான்றிதழ் பெற்றிருத்தல் மற்றும்,

			தேவைப்படும். சிறப்புத் துறையி குறைந்தபட்சம் 09 வருட சேவை அனுபவ பெற்றிருத்தல்
கட்டுமான முகாமையாளர்	01	C 295,000 –2 x 10,000 315,000	(கீழே 1 அல்லது 2 அல்லது 3) 01.சம்பந்தப்பட்ட துறையில் இளங்கலைப் பட்டம் (Bachelor's Degree) பெற்றிருத்தல். மற்றும் சம்பந்தப்பட்ட துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட இணை அங்கத்துவம் (Associate Membership) அல்லது அதற்கு ஒத்த தொழில்சார் தகைமையினைப் பெற்றிருத்தல். அத்துடன் சம்பந்தப்பட்ட துறையில் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தது 08 வருட அனுபவத்தினைப் பெற்றிருத்தல். 02.சம்பந்தப்பட்ட துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட கூட்டாண்மை அங்கத்துவம் (Corporate Membership) அல்லது அதற்கு ஒத்த தொழில்சார் தகைமையினைப் பெற்றிருத்தல். அத்துடன் சம்பந்தப்பட்ட துறையில் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தது 06 வருட அனுபவத்தினைப் பெற்றிருத்தல். 03.அரசாங்க நாடளாவிய சேவைகளில் Iஆம் வகுப்பு உத்தியோகத்தராக அல்லது சம்பந்தப்பட்ட துறையில் அதற்கு ஒத்த தரநிலையைக் கொண்ட உத்தியோகத்தராக இருத்தல். மற்றும் சம்பந்தப்பட்ட துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட இணை அங்கத்துவம் (Associate Membership) அல்லது அதற்கு ஒத்த தொழில்சார் தகைமையினைப் பெற்றிருத்தல். அத்துடன் Iஆம் வகுப்புப் பதவியில் அல்லது சம்பந்தப்பட்ட துறையில் அதற்கு ஒத்த தரநிலையிலான பதவியில் குறைந்தது 02 வருட அனுபவத்தினைப் பெற்றிருத்தல்.

குறிப்பு:-
மேற்கண்ட தகுதிகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இளங்கலைப் பட்டம் மற்றும் முதுகலைப் பட்டத்திற்குப் பின்வரும் நிபந்தனைகள் பொருந்தும்.
1.பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட அரச அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் இளங்கலைப் பட்டம் / முதுகலைப் பட்டம்.
அல்லது
2.இலங்கையில் ஒரு பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் இளங்கலைப் பட்டம் / முதுகலைப் பட்டம்.
அல்லது
3.1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்கப் பல்கலைக்கழகச் சட்டத்தின் 25A பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட இளங்கலைப் பட்டம் / முதுகலைப் பட்டம்.

விதிமுறைகளும் நிபந்தனைகளும்

சேவையில் அமர்த்தல் : அனைத்து நியமனங்களும் ஆரம்பத்தில் ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் இருக்கும். செயற்றிட்டத்தின் கால அளவு, பதவியின் அவசியம் மற்றும் அதிகாரியின் திருப்திகரமான செயல்திறன் ஆகியவற்றைப் பொறுத்து, இந்த ஒப்பந்தம் ஆண்டுதோறும் நீடிக்கப்படும்.

வயது எல்லை : பதவிக்கு விண்ணப்பிக்கும் நேரத்தில் விண்ணப்பதாரர்களின் வயது 62 ஐ அதிகரிக்காதிருத்தல் வேண்டும்.

E மற்றும் F பிரிவுகளின் தொழில்நுட்பப் பதவிகளுக்கான ஆட்சேர்ப்புக்காக, அட்டவணை 01 மற்றும் 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள அனுபவத்தைத் தவிர மற்ற அடிப்படைத் தகுதிகள், அரச துறையில் இதே போன்ற பதவிகளில் பணியாற்றும் அதிகாரிகளுக்குப் பொருந்தாது. மேலும், அட்டவணை 01 மற்றும் 02-இன் படி சம்பந்தப்பட்ட அரச அதிகாரி பெற்றுள்ள அனுபவம்/சிறப்புத் தகுதியைக் கருத்தில் கொண்டே அத்தகைய ஆட்சேர்ப்புகள் செய்யப்பட வேண்டும்.

முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கை இலக்கம் 02/2026-க்கு இணங்க, உள்ளூராட்சி மன்றங்கள், கூட்டுத்தாபனங்கள், சட்ட நியதிச் சபைகள், மற்றும் முழுமையாக அரசுக்குச் சொந்தமான கம்பனிகள் உள்ளிட்ட அரச சேவையில்/ மாகாண அரச சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட ஓர் அதிகாரி, இச் செயற்றிட்டத்திற்கு நியமிக்கப்படலாம்.

ஆட்சேர்ப்பு நடைமுறை: 2026,03.28 ஆம் திகதியிட்ட முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 02/2026 இன்படி, நியமன அதிகாரியால் நியமிக்கப்பட்ட ஒரு குழுவால் நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை மூலம் ஆட்சேர்ப்பு இறுதி செய்யப்படும். சம்பளங்கள் மேற்கூறிய சுற்றறிக்கையின் விதிகளுக்கு இணங்க வழங்கப்படும்.

விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்: அரச துறையில் அல்லது அரச நிறுவனங்களில் தற்போது பணியாற்றும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய நிறுவனத் தலைவர்கள் ஊடாக அனுப்பி வைக்க வேண்டும். ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்துடன் தமது சுயவிபரத் தகவல்களையும், தமது கல்வித் தகைமைகள் மற்றும் சேவை அனுபவத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் பிரதிகளையும், அவை உண்மையான பிரதிகள் எனத் தாமே சான்றளித்து இணைத்து, செயற்றிட்டப் பணிப்பாளர், பெரும் கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டுத் திட்டம், இல. 86, மில்லேனியம் மத்திய நிலையம், ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரிக்கு, 2026.11.27 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும்.

கடித உறையின் மேல் இடது மூலையில் செயற்றிட்டத்தின் பெயரையும், விண்ணப்பிக்கும் பதவியையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

மாநகர ஆணையாளர்,
கொழும்பு மாநகர சபை.

A.D.S. Rahma
Municipal Commissioner (A.D)
Colombo Municipal Council